# பாடகர் குழுவின் அறிக்கை

காலிமுகம் கிறிஸ்துநாதர் ஆலயத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்று அதன் பாடகர் குழு என்றால் அது மிகையாகாது. வேத சான்றுகளின் படி தேவ வழிபாட்டில் இசைக்கும் பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததின் நிமித்தமே பாடகர் குழுவிற்காக பிரத்தியேக வரிசைகள் கிறிஸ்தவ ஆலயங்களில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமது ஆலயத்தில் 24 ஆசனங்கள் கொண்ட பாடகரின் வரிசைகள் இந்த 150 ஆவது வருடத்தில் தேவனின் கிருபயினாலும் பராமரிப்பினாலும் நிரம்பி வழிகிறதை நாம் காண்கிறோம்.

ஆலய ஆராதனைகளை போதகரின் அனுசரணையுடன் மேன்மைப்படுத்துவதே எமது தலையாய கடமையாகக் கருதும் நாம் சபையாரின் திருமண மற்றும் மரண ஞாபகார்த்த ஆராதனைகளிலும் குழுவாக கலந்து கொள்கிறோம். திருச்சபையின் அட்டவணையின் படி வரும் திருநாட்களுக்கும், பண்டிகை நாட்களுக்கும் ஏற்ற பாடல்கள் பாடப்பட்டு ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறது. மாதத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் 1662 முறைப்படியுள்ள திருவிருந்து ஆராதனை முறையை உபயோகிக்கும் நாம் மாதத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை காலை ஜெப ஒழுங்கை முழுமையாக பாட்டாக பாடுகிறோம். மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமை வாலிபர் ஞாயிறு அதில் 1960 ஆம் ஆண்டு திருவிருந்து ஆராதனை முறை பாவிக்கப்படுகிறது லெந்து காலங்களில் வரும் வெள்ளிக்கிழமைகளில் மாலை ஆராதனையில் 1662 முறைப்படியுள்ள மாலை ஜெப ஒழுங்கு பாட்டாக ஏறெடுக்கப்படுகிறது. இந்த அருமையான மாலை ஜெப ஒழுங்கை இராகத்துடன் பாடுவதை பல ஆலயங்கள் கைவிட்டாலும் நாம் அதை இன்றுவரை செயல்படுத்துவது குறிப்பிடத்தக்கது. கைப்பிரதி, மற்றும் புத்தெழுச்சிப் பாடல்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. 3 மாதங்களுக்கு ஒரு முறை வரும் 5ம் ஞாயிறன்று ஆங்கில சபையுடன் இணைந்து ஐக்கிய ஆராதனை நடைமுறையில் உள்ளது. இந்த ஆராதனை முறையாகவும் இரு சபைகளுக்கு பயனுள்ளதாகவும் நடந்தேற பாடகரின் பங்கு மிக அவசியமாக உள்ளது.

சேரிப்பின் பண்டிகை, குருத்தோலை ஞாயிறு, பெரிய வெள்ளி, ஈஸ்டர் ஆகிய பண்டிகை நாட்களில் நடக்கும் ஆராதனைகளுக்காக விசேஷ கைப்பிரதிகள் அச்சிடப்பட்டு பாவிக்கப்படுகிறது. ஞாயிறு ஆராதனைகளுக்கு தேவையான பாடல்களுக்காக CLS இன் “கிறிஸ்து சபை பாமாலை” என்ற புத்தகத்தையே உபயோகிக்கிறோம். ஆழமான கருத்துக்களும், அருமையான இராகங்களும் கொண்ட இந்தப் பாமாலைப் புத்தகத்தில் 410 பாமாலைகளும், 400 கீர்த்தனைகளும் உள்ளன. அதிகமான கீர்த்தனைகளின் இராகங்களை நாம் அறியாதிருப்பது வருந்தத்தக்கது. ஆனால் எல்லா பாமாலைகளுக்கும் உரிய இராகங்களை நாம் அறிந்து வைத்திருக்கிறோம். அனைத்துப் பாமாலைகளின் இராகங்களும் (Music) நம்வசம் இருப்பதினாலும் இராகங்களை வாசிக்கக்கூடிய (Sight Reading) ஓர்கனிஸ்ட்டுக்களே (Organisit) நமக்குக் கடமையாற்றுவதினாலும் எந்த ஒரு பாமாலையின் இராகத்தையும் நாம் கற்றுக் கொள்ள முடிகிறது. ஆகவேதான் நாம் ஆலயத்தில் சேவை செய்ய வரும் ஓர்கனிஸ்ட்டுகள் முறைப்படி Music கற்றவராக இருக்க வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம்.

பாடகர் குழுவின் பலம் அதன் பயிற்சிகளிலேயே தங்கியுள்ளதாக நாம் மிக உறுதியாக நம்புகிறோம். சனிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கு நடைபெறும் இப்பயிற்சியில் பாடல் பயிற்சி மட்டுமல்லாமல் பாடகர் மத்தியில் ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் வளர்க்க உதவியாக உள்ளது. நம்மிடையே இருக்கும் நிறைவுகள் குறைவுகள் சம்பாஷிக்கப்படுகிறது. முன்பொருபோதும் இல்லாதவாறு தற்காலத்தில் அதிகரித்திருக்கும் வேலைப் பழுக்களின் மத்தியிலும் நம் பாடகர் சனிக்கிழமைகளில் ஒன்று கூடுவது நமக்கு உற்சாகத்தை அளிக்கிறது. பயிற்சிக்கு வருவதை வாழ்க்கையில் ஓர் பழக்கமாக்கியுள்ளோம். நல்ல குரல்வளம் இல்லாத சிறுவர்கள் கூட தொடர்ச்சியான பயிற்சிகளின் மூலம் குரல்வளம் மிக்க பாடகர்களாக உருப்பெற்றிருப்பதை எமது நீண்ட

அனுபவம் நிரூபிக்கிறது. ஒருவர் அல்லது சிலரின் தனிப்பட்ட காரணங்களுக்காகவோ குறுகியகால வசதிகளுக்காகவோ தற்போதைய பயிற்சி நாளும் நேரமும் மாற்றப்படமாட்டாதென நம்புகிறோம்.

வெள்ளை அங்கிகள் தரித்து பாரம்பரிய பாடல்களை வானம் எட்டும் அளவாகப் பாடி இந்நாள் வரை உற்சாகமாக இயங்கிவரும் இக்குழுவின் முன்னோர்களைப் பற்றி இந்த ஏட்டில் எழுதுவதைப் பெருமையாகக் கருதுகிறோம். பாடகர் தலைவர்களாக இருந்த காலம்சென்ற Y.S.டேவிட் மற்றும் திரு.ராஜசிங், வண.கோர்ணேலியஸ் போன்றவர்களின் சேவை மெச்சத்தக்கது. திரு.S.S.ஆசீர்வாதத்தின் தலைமைத்துவம் தலைசிறந்தது. பாடகர் குழுவிற்கு அவர் ஆற்றிய சேவைக்காக நாம் அவருக்கு தலைவணங்குகிறோம். 40 வருடங்களுக்கு இரவு பகல் பாராமல் வாத்தியம் (Hammon Organ) வாசித்து தன்னை முழுமையாக அர்ப்பணித்த காலஞ்சென்ற திரு.சைமன் தங்கராஜ் அவர்களின் பணியை நினைத்தால் மெய் சிலிர்க்கிறது. இந்த 150 வது வருடத்தில் அவரின் சேவை நம் சபைக்கு ஒரு சவால். வீட்டில் தன் மனைவி மரித்துக் கிடந்த தருணத்திலும் கூட ஒரு சேர்ப்பின் பண்டிகை ஆராதனைக்காக கிண்ணரம் வாசிக்க வந்தவர் கடமையுணர்வு மிக்க காலம் சென்ற A.T.சுந்தரம் முதல் 1995 வரை ஓர்கணிஸ்டாக பணிபுரிந்த சிந்தியா தாமஸ் அவிசாவளையில் இருந்து நமது ஆலயத்துக்கு கிண்ணரம் வாசிக்க ஞாயிறு காலையில் வருவதை பொறுப்புணர்ச்சியின் உச்சக்கட்டமாக நாம் நினைக்கிறோம். 1996 தொடக்கம் இந்நாள் வரை கிண்ணரம் வாசிக்கும் ராதா பிரதீபன் நமது பாடகர் குழுவிற்கு ஓர் புதிய தரத்தை நிலைப்படுத்தியிருக்கிறார். தன் வாசிப்பால் சோர்வுற்றவர்களுக்கு புத்துணர்ச்சியை கொடுக்கக்கூடியவர். அவர் பணி தொடரட்டும் அவருக்கு உதவியாக இருக்கும் அன்ஸ்லம் பிலிப், பிரின்சி ராபர்ட் ஆகிய இருவருக்கும் எமது பாராட்டுக்கள்.

நமது சபையிலும, நாட்டின் ஏனைய பாகங்களிலும் மற்றும் இதர நாடுகளிலும் இருக்கும் எமது பழைய அங்கத்தவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் விசேடமாக தமிழ்நாடு சாத்தான்குளத்தில் சுகவீனமாக இருக்கும் திரு.ஏசுவாடியான் அவர்களின் நீண்டகால சேவையை நினைவுகூருகிறோம். நமது பாடகர்களின் குடும்ப அங்கத்தவர்களின் மறைமுகமான தியாகங்களையும் நாம் அறியாமலில்லை.

1975 ஆம் ஆண்டு பாடகர் குழுவில் சேர்ந்து திரு.ஆசீர்வாதத்தின் கீழ் பயிற்சி பெற்று அவர் அவுஸ்ரேலியாவுக்கு குடியேற சென்றதின் நிமித்தம் 1987 ஆம் ஆண்டு பாடகர் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட நான் பாடகர் குழுவின் சார்பாக இந்த அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

இத்தருணத்தில் பாடகர் குழுவில் அங்கம் வகிக்கும் பெரியோர், வாலிபர் மற்றும் சிறுவர்களுக்கு என் நன்றிகளை தெரிவிக்கிறேன். விசேஷமாக எனக்கு உறுதுணையாக இருக்கும் திருமதி.ராதா, திரு.ஹென்றி, திரு.கொட்ரிஜ் திரு.அன்ஸ்லம், திரு.ராஜ்குமார், திரு.ஸ்டான்லி ஆகியோருக்கும் என் உள்ளம் கனிந்த நன்றிகள். என்னுடைய இந்த கடமையில் எனக்கு உற்சாமளித்த போதகர்களுக்கும், சபை கமிட்டி அங்கத்தவர்களுக்கும் என் நன்றிகள். கடந்த 18 வருடங்களாக எனக்கு உறுதுணையாக இருந்து பாடகர் குழுவிற்காக நான் அர்ப்பணிக்கும் காலம், நேரங்களையும் பொருட்படுத்தாமல் ஒத்துழைப்பு நல்கிய எனது மனைவிக்கு என் நன்றிகள்.

வெஸ்லி மார்க் ராஜமணி
பாடகர் குழு தலைவர்.